**சுருக்கம்**

விளம்பரம் - செய்தி மற்றும் சுற்றுலாத்துறை - அரசு விளம்பரங்கள் கணினி இணையத்தில் வெளியிடுதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

**செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை**

அரசு ஆணை (நிலை) எண்.212
நாள். 08.09.2006.

படிக்கப்பட்டது.

1) அரசு ஆணை (நிலை) எண்.262, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை, நாள்.15.12.1999

2) அரசு ஆணை (நிலை) எண்.95, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை, நாள். 12.5.2000

3) அரசு ஆணை (நிலை) எண்.208, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை, நாள்.11.9.2000

4) தி/கள்.மாருதி கம்ப்யூட்டர்ஸ் பி. லிமிடெட், சென்னை-35 அவர்கள் 28.6.2006 நாளிட்ட கடிதம்.

****

**ஆணை:-**

தமிழக அரசின் அனைத்துத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்களை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) இலவசமாக கணினி இணையத்தில் வெளியிட பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டது. இதனடிப்படையில், கீழ்க்குறிப்பிடும் கணினி இணையத்தில் அரசு விளம்பரங்களை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வெளியிட அனுமதி அளிக்கப்பட்டது.

1) www.tn.gov.in
2) www.chennaionline.com
3) www.aaramthinai.com
4) www.southindia.com
5) www.webulagam.com

2) தற்போது கணினி இணையத்தில் கடந்த ஆண்டுகளில் அரசு விளம்பரங்களை www.tn.gov.in என்னும் கணினி இணையத்தின் மூலம் மட்டும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றது.

3) தற்போது பார்வை 4-ல் காணும் கடிதத்தில், திருவாளர்கள். மாருதி கம்ப்யூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்னும் நிறுவனம் நடத்தும் "www.southindia.com" என்ற கணினி இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி / வரைகலை விளம்பரங்களை இலவசமாக வெளியிட முன்வருவதால், இந்த நிறுவனத்திற்கு வேறு எந்த உரிமையும் கோர முடியாது என்கின்ற நிபந்தனையுடன் அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வெ. இறையன்பு,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

திருாளர்கள். மாருதி கம்யூனிகேஷன் (பி) லிட்., முதல்மாடி, டெக்கான் எரிடேஜ், 341, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035.
இயக்குந!ர்,செய்தி மக்கள் தொடர்புத்துறை,சென்னை-9
துணை இயக்குநர், தேசீய தகவல் மையம், புனித ஜார்ஜ் கேட்டை, சென்னை-9
அனைத்து அரசுததுறை செயலாளர்கள், சென்னை-9
அனைத்து அரசுத்துறைகள்
அனைத்து அரசுத்துறைத் தலைவர்கள்
அனைத்து அரசுததுறை நிறுவனங்களின் தலைவர்கள்
செயலாளர், த.நா. அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்
மாநில கணக்காயர், சென்னை-9/18
அரசின் அங்கீகாரம் பெற்ற விளம்பர நிறுவனங்கள்
அனைத்து மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்

நகல்!!ய
செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
தகவல் தொழில்நுட்பத்துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**பிரிவு அலுவலர்.**